# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## **<u>ஆணை நாள் 03.08.2026</u>**

## **<u>முன்னிலை</u>**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 10933/SCIC/2024</u>**

| | | |
|---|---|---|
| Thiru S. Kuppuraj S/o. Swaminathan<br>Flat No.2. Door No.26 (New) 32/2 (Old)<br>Third Trust Cross Street<br>Madavelipakkam, CHENNAI - 600 028.<br>Phone:7358637622 | - | மேல்முறையீட்டாளர் |

*/எதிர்/*

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் /<br>முதுநிலை வரைவாளர்<br>சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்<br>தாளமுத்து நடராஜன் மாளிகை<br>எண்.1, காந்தி இர்வின் ரோடு<br>எழும்பூர், சென்னை - 600 008. | - | பொது அதிகார அமைப்பு |

## **<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **18.03.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 26.04.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 22.08.2024 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 19.09.2025 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 28.10.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 18/03/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை-8 அவர்களுக்கு அனுப்பி, அதில் “Certified copy of the petition received from Kudir

Residence Welfare dated 19-02-2024 for building 'KUTIR' situated at Door No.26 (New), 32/2 (Old). Third Trust Cross Street. Mandavelipakkam Chennai-28" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.S.குப்புராஜ் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.ம.நிர்மலாதேவி, துணை திட்ட அமைப்பாளர், முதுநிலை திட்ட அமைப்பாளர் (பொ), சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை-8 அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 19/09/2025 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், மேற்குறிப்பிட்ட 19/09/2025 தேதியிட்ட தகவல் தனக்கு கிடைக்கப் பெற்றதை ஒப்புக் கொண்டு, மிகவும் காலதாமதமாக அத்தகவல் கிடைக்கப் பெற்றதாகப் புகார் கூறினார். **எனவே, அப்போதைய (18/03/2024 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ஜி.விஜயலட்சுமி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழான 18/03/2024 தேதியிட்ட மனுவிற்கு உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் தகவல் அளிக்காமைக்கு அன்னார் மீது பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 நாட்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன திருமதி.ஜி.விஜயலட்சுமி என்பவரிடமிருந்து காரண விளக்க கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தைப் பெற்று அதனை 31/08/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

3. மனுதாரர், தான் மேற்சொன்ன அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வருவதாகவும், பொது நலன் கருதியே, தான் தகவல்களைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவல்களை, ஆவணங்களின்படி உரிய தகவல் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது. எனினும், காரண விளக்க கேட்புக் குறிப்பாணைக்கான விளக்கம் மேற்சொன்ன முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ஜி.விஜயலட்சுமி அவர்களிடமிருந்து வர வேண்டியுள்ளது.

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10933/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1.பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை - 600 008.

2.திருமதி ஜி.விஜயலட்சுமி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் /
துணை திட்ட அமைப்பாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை - 600 008.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

Thiru S. Kuppuraj S/o. Swaminathan
Flat No.2. Door No.26 (New) 32/2 (Old)
Third Trust Cross Street
Madavelipakkam, CHENNAI - 600 028.
Phone:7358637622

நகல்

1.முதன்மை செயல் அலுவலர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை - 600 008.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம்,
சென்னை-600 035.

RG/Sr.PC